**28.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயிலில் பயணிகளுக்கு கைபேசியில் கட்டணமில்லா பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் மின்சார ஸ்கூட்டர் வசதிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (28.02.2020) துவக்கி வைத்தார்**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (28.02.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் பயணிகளுக்கு கைபேசியில் கட்டணமில்லா பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் மின்சார ஸ்கூட்டர் வசதிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல் இ.ஆ.ப., தலைமை வகித்தார்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் கீழ் மொத்தம் 45 கி.மீ நீளத்திலான இரண்டு வழித்தடங்களிலும், 10.02.2019 முதல் முழுமையாக பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது.

இளைய தலைமுறை பயணிகளை ஈர்க்கும் நோக்கில் சென்னை மெட்ரோ இரயிலில் கைபேசியைப் பயன்படுத்தி கட்டணமில்லா பொழுதுபோக்கு அம்சங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. பயணிகளைக் கவரும் விதமாக சென்னை மெட்ரோ இரயிலில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பொழுதுபோக்கு வசதிகளை முதற்கட்டமாக சென்ட்ரல் மெட்ரோ நிலையத்திலிருந்து பரங்கிமலை மற்றும் விமான நிலையம் செல்லும் பச்சை வழித்தடத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (28.02.2020) துவக்கி வைத்தார். விமான நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை வரை செல்லும் நீல வழித்தடத்தில் விரைவில் இந்த வசதி ஏற்படுத்தப்படும்.

இந்த வசதியைச் செயல்படுத்துவதற்கு திருவாளர்கள் சுகர்பாக்ஸ் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பயணிகள் மெட்ரோ இரயிலில் நுழைந்த பின்னர், தங்களிடமுள்ள திறன்மிக்க கைபேசியில் ஒரு செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும். அதனைப் பயன்படுத்தி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் திரைப்படங்கள், காட்சிகள் மற்றும் தொடர்கதைகள் போன்றவற்றை கட்டணமில்லாமல் பார்க்க முடியும்.

பயணிகளுக்கு தற்போது பல்வேறு இணைப்புப் போக்குவரத்து வசதிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அளித்து வருவதால், மெட்ரோ இரயிலில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. பயணிகளுக்கு தற்போது கூடுதல் வசதியாக மிக குறைந்த வாடகை மின்சார ஸ்கூட்டர் திட்டத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், திருவாளர்கள் ஃபிளை என்ற நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துகிறது.

இந்த வசதியை பயன்படுத்த பயணிகள் தங்களுடைய மொபைல் போனில் ஃபிளை என்ற செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும். அதன் பின்னர் அதில் கேட்கும் விவரங்களை குறிப்பிட்ட தனது புகைப்படத்தையும் அதில் பதிவு செய்து விட்டு அதில் வரும் கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்தால் உடனடியாக வாகனம் பயணம் செல்லத் தயாராகி விடும். இந்த வாகனத்தை இயக்குவதற்கு சாவி எதுவும் தேவையில்லாமல், செயலி மூலமே இயக்கிக் கொள்ளலாம்.

ஐந்து ரூபாய்க்கு இந்த ஸ்கூட்டரை பதிவு செய்து, பயணிக்கும் ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு ரூபாய் மட்டுமே வாடகைக் கட்டணம் செலுத்த வேண்டும். எந்த நிலையத்திலிருந்தும் ஸ்கூட்டரை எடுத்துச் சென்று, செயலியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த இடத்திலும் வாகனத்தை விட்டுச் செல்லலாம்.

முதற்கட்டமாக கிண்டி, ஆலந்தூர், நந்தனம் மற்றும் பரங்கிமலை மெட்ரோ நிலையங்களில் செயல்படுத்தப்படும், இந்த ஸ்கூட்டர் வாகன சேவையை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (28.02.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் துவக்கி வைத்தார். இந்த வசதி எஞ்சியுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு விரைவில் விரிவு படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் (திட்டங்கள்) திரு.ராஜீவ் நாராயன் திவேதி, இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) (பொறுப்பு) திரு. எல். நரசிம் பிரசாத், தலைமைப் பொது மேலாளர்கள், சுகர்பாக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் திரு. ரோஹித் பரான்ஜ்பி, ஃபிளை நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு,அனிருத் கெம்கா மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.